287

# சுதந்திர தீபம்

287
3.47

ஆக்கியோன்:
"கலைப்பித்தன்"
ஆசிரியர்: "கலைமலர்" புதுக்கோட்டை

V2:51
N47

காடி பதிப்பகம்.

112753

# சுதந்திரதீபம்

★

எழுதியவர் : கலைப்பித்தன்,
(கலைமலர் ஆசிரியர்)

★

தியாகக்கொடி பதிப்பகம்,
துறையூர், திருச்சி ஜில்லா
1947

முதற் பதிப்பு :
ஜுலை — 1947.

## பதிப்புரை

எங்கள் தியாகக்கொடியில் பூக்கும் மூன்றுவது மலர் இது. இதை பாரததேவிக்கு காணிக்கையாக வைக்கிறோம்.

சிறந்த தேசபக்தரான கலைமலர் ஆசிரியர் திரு. கலைப்பித்தன் அவர்களை எழுதித்தரும்படி கடித மூலம் கோரியவுடனே இப்புத்தகத்தை தொகுத்து தந்துள்ளார். அன்னவருக்கு எங்கள் நன்றி.

முன்னுரை தந்துதவிய முனிவர் திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கட்கும் எமது நன்றி.

எங்கள் வெளியீடுகளுக்கு ஆதரவுதந்துள்ள வாசகர்கள் இவ்வெளியீட்டையும் ஆதரிப்பார்கள் என நம்புகிறோம்.

பதிப்பாளர்கள்.

## சமர்ப்பணம்

என் ஆருயிர் அன்னை சமாதானம் அம்மாள் அவர்கட்கும், அருமைத்தந்தை டாக்டர் ஜி. பி. அருளப்பன் அவர்கட்கும் பக்தியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

112753

கலைப்பித்தன்.

விலை 0—5—0

PRINTED AT THE SRI NATARAJA PRESS, TURAIYUR. P. I. C. TY. 46

# முன்னுரை

அறத்தால் வருவதே இன்பம் என்பது இந்தியாவின் உள்ளம். பணத்தால் வருவதே இன்பம்; போரால் வருவதே புகழ் என்பது வெண்ணாடுகளின் உள்ளம். அங்கே தொழிலும், வாணிபமும் பொருள் குவிக்கின்றன; குவித்த பொருள் குண்டுப் புகையால் போகிறது. இங்கே, அஹிம்ஸா தர்மம் சாத்வீக எதிர்ப்பினால் பகைவனையும் நண்பனுக்கி இன்று விடுதலை தந்திருக்கிறது. இந்த அஹிம்ஸா தர்மம் மஹாத்மா காந்தியாக உருவெடுத்துள்ளது. மற்றொரு பெரிய சக்தி சுபாஷ் சந்திரபோஸின் நெஞ்சுரங் கொண்ட தியாக வீரம் - நேதாஜியின் ஜேஹிந் தியக்கம் ஆசியாவுக்கே புதிய விழிப்பைத் தந்தது.

இந்த இரண்டு தலைவர் கருத்துக்களையும், கவிக் குயில் பாரதியார் பாடல்களையும் பெய்து இச் சிறு நூல் உருவானது. இது சிதம்பரம் பிள்ளை போன்ற சுதந்திர வீரர் உள்ளத்தையும் விளக்குகிறது.

"சுதந்திர தீபம்" என்ற இந்த ஒன்றரை - பாரநூல் நல்ல நடையில் காலத்திற்கேற்ற பொருளை ஊட்டுகிறது. இந்நூலை எழுதிய கலைப்பித்தர், கலைமலர் ஆசிரியர்; மறுமலர்ச்சி எழுத்தாளர். இவர் கால்பந்து விளையாட்டில் தவறி விழுந்து கால் நடக்க முடியாமல் இருந்த இடத்திலேயே இருப்பவர்; கால் - நடையின்றி இவரது தமிழ் நடை முழுவேகத்துடன் செல்கிறது. இவரது தமிழார்வமும், விடுதலை யுணர்வும் மெச்சத் தக்கவை.

சுதந்திர தீபம் சுடரோங்கிப் பொலிக!

புதுயுக நிலையம், புதுச்சேரி
25—6—47

சுத்தானந்த பாரதி.

## வணக்கம்.

நான் கால்பந்து விளையாட்டில் ஊனமடைந்து சுமார் பத்து வருடங்களாக (மூர்ச்சைப்போட்டு விடாதீர்கள்!) நோயாளி என்ற சொல் மாறாமல் பல மருத்துவ நிலையங்களிலும் சிறகொடிந்த பறவையாக இருந்த காலையில் இந்திய விடுதலைப் போரில் சேர்ந்து செயலாற்ற இயலவில்லையே என்று எண்ணி ஏங்கினேன்.

பின்னர் நாட்டிலே ஆகஸ்டுப் புரட்சித் தீ எட்டுத்திக்கும் சுடர் விட்டு எரியத் தொடங்கியது; அந்தத் தீயில் துணிந்து குதித்து விடத் தீர்மானித்தேன். ஆனால் என் கால்கள் அதற்கு இடம் கொடாதவாறு தடை செய்தன. இலங்கையிலுள்ள நண்பர் ஒருவருக்குப் புரட்சிகரமான கருத்தொடு கடிதமெழுதினேன் என்று அக்கடிதத்தைத் 'தணிக்கை' செய்து அரசாங்கத்தார் கண்களை என் பக்கம் திருப்பினர். சி. ஐ. டி. ஒருவன் என்னைப் பல கேள்விகள் கேட்டு ஏமாந்து திரும்பினான். ஒற்றர்கள் பலர் என்னைச் சுற்றி வட்டமிட்டனர்.

இது நடந்தது எங்கு தெரியுமா? ஆமாம்; நான் உயிருக்கும் வாழ்வுக்கும் மன்றாடிக் கொண்டிருந்த ஆஸ்பத்திரியில்தான். நடை யிழந்து இருந்த என்னைக் கண்டு நடுநடுங்கியது இந்த ஆங்கில அரசாங்கம்; நாற்சுவர்களை விட்டு நகரமுடியாத என்னைப்பார்த்துப் பதறியது இந்தப்பாழும் அரசாங்கம். கட்டிலோடு கட்டிலாய்க் கிடந்த என்னைக் கண்டு கதறினர் இந்தக் காருண்ய (!) கவர்ன்மெண் டார். எத்தனையோ கொடிய ஆயுதங்களை வைத்துள்ள இந்த ஆங்கில அரசாங்கம், எழுதுகோலைத் தவிர, வேறு எவ்வித ஆயுதமு மில்லாத என்னைப்பார்த்துப் பயந்ததை நினைத்து நகைத்தேன் நான். படுத்த படுக்கையிலே இருந்து வந்த என்னை ஆளும் வர்க்கம் பயங்கர வாதியாகக் கருதியதைக் கண்டு என்னால் சிரிக்காமலிருக்க முடிய வில்லை. 'இடுக்கண் வருங்கால் நகுக' என்பது வள்ளுவப் பெருந் தகையின் வாக்கல்லவா?

இவ்விதமிருக்க சில மாதங்களுக்கு முன்னர் துறையூர் தியாகக் கொடி பதிப்பகத்தைச் சேர்ந்த எனது நண்பர் குப்தா அவர்கள் என்னை ஓர் அரசியல் நூல் எழுதுமாறு தூண்டினார். உடனே நான் இச்சிறிய சுதந்திர தீபத்தை எழுதினேன். இது எவ்வளவு தூரம் பயனளிக்குமென்பதைக் காலந்தான் நிர்ணயிக்கவேண்டும். 'சுதந்திர தீபத்தை' ஏற்றிவைத்துவிட்டேன். சூறாவளிக் காற்று இதை அணைத்துவிடாமல் பார்த்துக்கொள்வது உங்கள் கடமை.

இப்புத்தகத்தை வெளியிட முன்வந்த தியாகக்கொடி பதிப் பகத்தாருக்கும், முன்னுரைத் தீட்டித்தந்துதவிய முனிவர் சுத்தானந்த பாரதியார் அவர்கட்கும் என் உளமார்ந்த நன்றி.

புதுக்கோட்டை,
6—7—47

கலைப்பித்தன்.



# சுதந்திர தீபம்.

❋

இரத்தம் சிந்தினால்தான் சுதந்திரம் கிடைப்பதாயிருப்பின் இதோ இந்தியாவின் சுதந்திரத்திற்காக இரத்தபலி கொடுக்கத் தயாராயிருக்கிறேன். சுதந்திரத்திற்காக உயிரைத் தியாகம் செய்யக்கூடிய வீரர்களின் அட்டவணை ஒன்று தயாரிப்பின், என் உடலில் ஊறும் இரத்தத்திலே தோய்த்து, எனது பெயரை வீரத்தியாகிகளின் அட்டவணையில் முதலில் பதிவுசெய்துவிடுவேன். சுதந்திர வாழ்விலுள்ள சுகத்தை முற்றும் உணர்ந்தவன். அடிமை வாழ்வு நரகம் போன்றது. "மக்கள் தின்றும், குடித்தும், களித்தும் இன்னும் சில ஆண்டுகள் உயிர்வாழுதலினும், தேசத்தின் முன்னேற்றத்திற்காக இன்றே உயிர்நீத்தல் சாலச்சிறந்தது" என்று கூறிய நெப்போலியன் பொன்மொழியின் கருத்துக்களை முற்றிலும் உணர்ந்திருக்கிறேன். ஒரு சமுதாயமோ,

நாடோ, பெருந்துயர் அடைந்திருக்கிறதென்றால், அது அடிமை வாழ்க்கையே தவிர வேறில்லை.

அடிமை யென்று கூறப்படும் சடலங்கள் வேறு எப்பேறு பெற்றிருப்பினும் அன்னவர் வாழ்க்கைப் பாழாம். சுதந்திரமில்லாத நாட்டிலே அறிவு, ஆக்கம், காவியம், ஞானம் முதலிய அனைத்தும் பாழ் என்கிறார்— பாரதி. சுதந்திரத்தின் பெருமை பாரதியின் பின்வரும் இரண்ட்டிகளே எடுத்துக்காட்டுகின்றன.

“நின்னருள் பெற்றிலாதார்
நிகரிலாச் செல்வரேனும்
பன்னருங் கல்விகேள்வி
படைத்துயர்ந் திட்டாரேனும்
பின்னரும் எண்ணிலாத
பெருமையிற் சிறந்தாரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள்வேய் பிணத்தோடொப்பார்”

“தேவி! நின்னொளி பெறாத
தேயமோர் தேயமாமோ?
ஆவியங்குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்கமுண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள் வேதங்களுண்டோ?
பாவியரன்றோ நின்றன்
பாலனம் படைத்திலாதார்?”

ஒரு நாட்டை ஆள இன்னொரு நாடு தகுதியுடையதா? இல்லை என்று ஆணித்தரமாக அறைகிறார் ஆப்ரகாம் லிங்கன். ஆம்! ஒரு நாட்டை ஆள இன்னொரு நாடு தகுதியுடையதல்ல. ஒரு மனிதனை ஆள இன்னொரு

மனிதன் தகுதியற்றவன்தான். அடிமை என்ற அஸ்திவாரத்தின் மீது எந்த மதத்தையும் எழுப்பலாகாது. கடவுளுக்குக் கூட நாம் அடிமையென்று கூறிக்கொள்ள வேண்டாம். அடிமை யெனும் ஆபாசப்பதம் தமிழ்ப் பேரகராதியிலிருந்தே எடுபடவேண்டும். "அடிமைத் தனத்தின் மூலமாக மோட்சமடைதல் கேவலம்" என்கிருர் — **இங்கார்சால்.** சுதந்திரம் இல்லாத இடத்தில் ஒழுக்கத்தின் உயர்வு காணப்படும் என்று சொல்வதற்கில்லை. அடிமை வாழ்வு இயந்திரம் போன்றது. "சுதந்திரமில்லாத இடத்தில் ஒழுக்கமில்லை; எங்கே சுதந்திரமில்லையோ, அங்கே மனிதவாழ்க்கையானது ஐம்பொறிகளின் இயந்திரம் போன்றதாகிவிடுகிறது" என்றியம்புகின்ருர் இத்தாலிய அறிஞர் **மாஜினி.** கடமை அன்பினுலேயே இன்பமாகிறது. அன்பு சுதந்திரத்தினுலேயே ஒளிவீசுகின்றது. சுதந்திரம் தியாகத்தினுல்தான் கைகூடுகிறது. **சுவாமி விவேகானந்தரின்** வீரகர்ஜனையைக் கேட்போம்:—

"கடமை யென்பது அன்பினுலேயே ருசிகரமாகிறது. அன்பு சுதந்திரம் ஒன்றினுலேயே பிரகாசிக்கிறது. சுதந்திரம் தியாகத்தினுல் சித்திக்கிறது. அறிவுச் சுதந்திரத்திற்காக பாடுபடுபவர்களை இம்சிக்கக்கொணர்ந்த வழக்கில், பிரதிபலன் யாதுமின்றி, **ராபர்ட் ஜி. இங்கார்சால்** ஆஜராகி வெகுவாக விவாதிக்கிருர். அதில்ஒருபகுதியை உற்று நோக்குவோம்: "உலகிலே அதி முக்கியமானது சுதந்திரம், அது உணவைவிட, உடையைவிட பெரியது. திரவியத்தைவிட, வீடுகளைவிடப் பெரியது' சிற்பம்,ஓவியம், கலைகள்யாவற்றினும் உயர்ந்தது. எல்லா மதங்களைக் காட்டினும் சுதந்திரமே தனிசிறந்தது. இத்தகைய இணையற்ற மதிப்புள்ள மரகதத்தைக் காப்பாற்ற நான் எதனையும் இழக்கத் தயாராயிருக்கிறேன்'. என்கிருர்.

"சுதந்திரம் நமது பிறப்புரிமை; அதனைப் பறிக்க எவராலும் முடியாது," என்று விடுதலை சகாப்தத்தின் வெற்றிவேள் திலகர் காட்டிய உண்மை. இந்த உண்மையை ஒவ்வொருஜீவனும்—பகுத்தறிவு வாய்ந்த மனித ஜீவன்மட்டுமல்ல—வானமெனும் அகண்ட விருக்ஷத்தின்கீழ்—வாழும் சகலஜீவன்களுக்கும் உட்பட்டது. சுதந்திரம் என்பது என்ன? என்று கிளம்பியது? ஏன்? எங்கே? எப்படி? எப்பொழுது?........... ஆராய்வோம். உலகப்பேரகராதியைப் புரட்டுவோம்; துருவி நோக்குவோம்.

அன்று கிளம்பிய சுதந்திரக் கனலுக்கு வைக்கோற் போர்கொண்டு அணைபோட முயன்ற எதேச்சாதிகாரம் இன்றுமுளது. உலகமெனும் பறந்த வெளியிலே ஊர்க் குருவிபோல் உயரப் பறக்கும் எதேச்சாதிகாரம் தான் உயரப் பறப்பதை அனைவரும் கண்டு அஞ்சுவர், மெச்சுவர் என்றெண்ணிற்று. உலக மக்கள் அதனின் மெய்ச் சொரூபத்தை உணர்ந்தனர், மானிட சமுதாயம் ஆண்டியென்றும், அரசனென்றும் அபலைப்பட்டும் தாங்கியதல்லவா! அடிமைப்பட்ட மக்கள் உலகின் ஒவ்வோர் மூலையிலும் கொதித்தெழுந்தனர். எதேச்சாதிகாரப் பேயினை ஓட்ட எத்தனை தியாகிகள் தம் உடல், பொருள், ஆவி, சுற்றம் மற்றுமனைத்தும் விடுத்து, விடுதலையே எங்கள் போர்முரசு, சுதந்திரமே எங்கள் குறிக்கோள் என்று ஆர்த்தனர். ஏகாதிபத்திய வெறி மீறிய ஆளும் வர்க்கம் ஆயுத பலங்கொண்டும், ராணுவ பலங்கொண்டும் அடக்குமுறை செய்து பார்த்தன. அங்கங்கு தோன்றிய சுதந்தரத் தீ காட்டுத்தீபோல் பரவியது. ஏகாதிபத்தியக் கும்பலின் ஜன்ம விரோதி நெப்போலியன் தன் தாயகத்தே பீடித்திருந்த அடிமை வாழ்வைக் குலைத்தான். சுதந்திர ஆர்வமிக்க வீரர்படை சேகரித்தான். தன் விவேக அறிவால் சிதற அடித்தான் கும்

பலே. கதறியது ஆளும் வர்க்கம். நாட்டரசை பிடித்த ஏகாதிபத்யம் நசுக்கியது நயவஞ்சகத்தால்.

ஆளும் வெறிமீறிய கூட்டத்தின் வைரியான அடால்ப் ஹிட்லர், ஆசைகொண்டலையும் ஆதிபத்தியத்தினைக்கண்டான். தன் நாட்டு மக்கள் உற்ற சீர்கேட்டினை உற்றுநோக்கினன். அவன் எத்தனை பாபி; பயங்கர வாதி; உலகத்துரோகி ........... இது வல்லரசுகள் கூற்று. அதனை உரித்துப்பார்க்க அக்கரையில்லை. அவன் மூட்டியது, ஏகாதிபத்திய சூழ்ச்சியால் மாட்டியிருக்கும் விளம்பரப் பல்கையிலிருப்பதுபோல், இனப் போராயினுஞ்சரி, ஆதிக்கப்போராயினும் சரியே. ஓரளவு சுதந்திரப்போர் என்று துணிவுடன் கூறலாம். வஞ்சகமும் தந்திரமும் ஒருருவாயமைந்த பணக்காரக் குழுவை அடக்குவதிலும், ஒடுக்குவதிலும் ஆர்வங்கொண்டானா! கார்ல் மார்க்ஸ் அல்லது உலகினின்றே பிரஷ்டம் செய்ய எத்தனித்தானா? இல்லை! பழுக்கக் காய்ந்த கொழுவினால், திமிர்படைத்த பணக்கார புழுக்கும்பலை தீய்த்து ஒழித்துவிட முடிவுகட்டினன். அவனது சித்தாந்தத்தை லெனின் கடைப்பிடித்தான். கண்டு நடுங்கியது ஆளும் வர்க்கம். வெற்றி கண்டான். இன்று ரஷ்யாவில் நடப்பது என்ன? நாம் நடைமுறையில் காணவல்ல உண்மை. உலகத்தையே கட்டி ஆள்வதாக கனவுகாணும் ஆதிபத்திய வர்க்கம் வால்நீட்ட முடியுமா ரஷ்யாவிடம்?

பாருங்கள் ஜப்பானை! சிறிய தீவு. அங்குற்ற சுதந்திர உணர்ச்சியினை யறிய இயலுமா! ஏன் ஏகாதிபத்தியத்திரை மறைத்துக் கொண்டிருக்கிறது. விஞ்ஞானமாம்! விஞ்ஞானம்! சாவதற்கோ? உய்வதற்கோ? அணுக்குண்டு, பரமாணுக்குண்டு, அணுப்பரமாணுக்குண்டு எத்தனை குண்டுகள். சுண்டைக்காயளவு தீவினில் உதித்த சுதந்திர உணர்ச்சியினைக் கொல்ல ஏகாதிபத்யம் இறுதியிலே கையாண்ட விஞ்ஞான தந்திரம்.

ஐரோப்பாவின் நோயாளி என்று ஏள்னம் செய்யப் பட்ட் துருக்கிதேசம் இன்று தலை நிமிர்ந்து நிற்பது முஸ்தபா கமால்பாஷா போன்ற சுதந்திர வீரர்களால்; மூட வைதீகப் பழக்க வழக்கங்கள் நிறைந்த சைனு புத்துயிர் பெற்றிருப்பது டாக்டர் சன்யாட்சன் போன்ற அறிஞரால்; முடங்கிக்கிடந்த அயர்லாந்தினை வீரநாதம் செய்து தட்டி யெழுப்பியவர், டிவேலரா, மைக்கேல் காலின்ஸ் போன்ற வீரத் தியாகிகளால் என்பன அதி கார வர்க்கத்தினரின் டயரியிலே குறிக்கப்பட்டிருக் கின்றன.

எங்கெங்கோ முளைத்தெழுந்த சுதந்திர உணர்ச்சி இந்தியாவில் என்ன அவ்விதை சொத்தையாகிவிட் டதா? இன்று நேற்றல்ல. அறுபத்திநான்கு வருடங் களுக்கு மேலாகவே வளர்ந்து வருகிறது எத்தனை கண் காணிப்பு! எத்தனைக் கட்டுக்காவல்! வாழ்க்கையை விடுதலைப் போராட்டத்திற்காகவே அர்ப்பணித்து அடி மைத்தளையைக் களைந்தெறிய எத்தனை தேசத்தொண் டர்கள்; எத்தனை கருமவீரர்கள் "விஜயலெக்ஷிமி" யின் பாதங்களிலே தங்கள் சிரசுகளை காணிக்கையாக செலுத் தினர். ஏகாதிபத்ய வெறியின் உச்சநிலை தணிகிறது. ஆளும் அதிகார வர்க்கத்தின் பிடி தளர்கிறது. உரம் கொண்ட சுதந்தரக் கனலின் வேகம் இப்போது தெரிகிறது.

**வியாபாரப் போர்வையால் வலைத்துப்பிடிக்கும் மோசக் காரக் கும்பலே!**

ஆட்சியின் அச்சுமுறிவு தெனபடுகிறதா! வர்மமு டன் தன்னை நோக்கிப் பாயவரும் மிருகத்தினை பக்கலில் வாளாவிருக்கும் மிருகமுடன் மூட்டிவிட்டு சிண்டு முடியும் ஜாலவித்தை துருப்பிடித்து விட்டது. உலகத்திலே இந்தியா அடிமை வாழ்வினின்றும் பல படிகள் முன்

னேறிவிட்டது. பிற்போக்கு சக்திகளை சுதந்திரக் கன லின் சூழ்நிலையாகச் சிருஷ்டித்திருக்கிருய். இது இறுதித் தந்திரம் போலும். இது தெரிந்ததுதான். எம் தாய கத்து வீரர், சட்ட நிபுணர், ராஜதந்திரி சத்திய மூர்த்தி யின் வார்த்தைகள் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கின் றன. சரித்திர கால சாணக்கியர் உணர்த்திய பாடம்.

"நாசகாரக் கும்பலே! ஊன்றி நிற்கும் உம் வர்க் கத்தின் ஆணிவேர், சல்லிவேர், பக்கவேர் ஒன்று விடாது மண்ணோடு தோன்றி ஒன் ருென்ருய்களைந்துஉரையிட்டுகுழிதோண்டிப் புதைத்து நெருப்பு ஆற்றினைப்பாய்ச்சி, சாம் பல் விழாமல் சுட்டுப் பொசுக்க வேண்டும்" என் ருரே, இந்த சூத்திரம் கையாளப்படும் காலம் நெருங்கு கிறது.

## ஆட்சிபுரியும் அந்தப் பேயரசே!

"அஹிம்ஸை; அஹிம்ஸை யென்று போதிக்கிருரே காந்திஜி என்கிருயோ. அதற்குக் கெக்கலிப்பா! அஹிம் ஸையே உருவுபெற்ற காந்தி; சத்தியமே விரதமபூண்ட காந்தி; என்ன சொன்னர். அறியாய். "களிநடம் புரியும் பணமோகம் பிடித்த பிசாசுக்குழுவே! நாட்டாசை நத் தித் திரியும் அரக்க மனம்படைத்த இராக்கதக் கூட்ட மே! எம் சோதரர்வாழ் புனித பூமியாம் இந்தியாவை விட்டு வெளியேறு" என்று தன் அஹிம்ஸா கொள்கை யின் ஆவேச உணர்ச்சியால் கூறினர். அடிமைத் தளை யால் நசுங்கி அல்லற்படும் சோதரர் கதியினை உற்று நோக்கினர். அடிமைத்தனத்தின் அரவணைப்பினின் றும் விடுவிக்கச் சுதந்திர உணர்ச்சியைப் புகுத்தினர். சத்தியமும் அஹிம்ஸையும் போர்தனு முறையில் மெய்ப் பித்துக்காட்டினர். "சுயராஜ்யம் கோழைகளுக்கு ஏற்

பட்டதல்ல. கண்களைக்கூட மூடிக்கட்டக்கூடாது என்று மறுத்து புன்னகை தவழ தூக்குமேடையில் ஏறவல்ல வீரர்களுக்கு ஏற்பட்டதாகும்" என்றுகூறினர் காந்திஜி. அன்னவரின் உணர்ச்சி வேகத்தில் சிகைபெற்ற சுதந்திர வீரர்கள் **நேருஜி; ஆஸாத்; படேல்; தேசாய்** ஆகியோர் தத்தம் வாழ்க்கையையே பணயம் வைத்தனர். சுத்த வீரர் **சுபாஷ்** தன் தாய்நாட்டைக் காக்க எழும் சுதந்தர தாபம், தன் உள்ளக்கிடக்கையினின்றும் உந்தி எழும் முன்னேற்ற பிரச்சனை காந்திஜீயின் அஹிம்ஸையின் துணைபெற ஏதுவில்லை என்றெண்ணினர். உணர்ச்சிவேகத்தால் தாக்குண்ட மனத்தைத் திடப்படுத்தினர். "எதேச்சாதிகாரமே இந்தியாவை விட்டு வெளியேறு" என்ற காந்திஜியின் வார்த்தைகளை மந்திரமாக் ஜெபித்தார். கண்ணீரும் கம்பலையுமாய் இந்தியத்தாய் நிற்கும் சோகக் காட்சியைக் கண்ணுற்றார். இந்தியர்வாழ் நாற்பதுகோடி மக்களுக்காகப் போராடத் தூண்டியதால் அவரின் கொழுந்து விட்டெறியும் சுதந்திர உணர்ச்சி அல்ல அல்ல. உலகம் வாழ் நானூறுகோடி மக்களுக்காக், அகிலமெங்கும் பரவியிருந்த புரட்சி நீதியைப் படித்தான். செயலாற்ற இயல்பில்லையா! நாட்டு வளமில்லையா! உலகம் படித்திருந்த புரட்சி நீதியில் புதுமையைப் புகுத்தினன். செய் அல்லது செத்துமடி என்று அவர் வீறுகொண்ட மனம் உறுத்தியது. ஏகாதிபத்ய சுரண்டல் எலிகளின் கண்ணி வீச்சிலிருந்து வளைபுகுந்து கிளம்பினன். கடல்கடந்து சிதறிக்கிடந்த இந்தியரனைவரையும் ஒன்றுகுவித்தான். மூலை முடுக்குகளில் ஒண்டிக்கிடந்த அத்தனை இந்தியரின் உள்ளப்பெருக்கினை உணர்ந்தான். கவர்ந்தான், மனப்போக்கினை தன் கம்பீர தோற்றமும், தேசிய உணர்ச்சியும் அனைத்தவரையும் வசீகரித்தன. இந்திய தேசீய ராணுவப்படை யொன்று நிறுவினன். ஆண்களும், பெண்களும், திரள்திரளாய்ச் சேர்ந்தனர். இந்தியச் செல்வர்கள் பண மூட்டைகளைக் கொண்டு குவித்தனர். படையினை

உரப்படுத்தினர். எத்தனை சுதந்திர ஆர்வம். எல்லாம் எதற்கு? தாய் நாட்டின் விடுதலை பெற அஹிம்சாமூர்த்தியின் வார்த்தைகளை மெய்ப்பிக்க பிறர்வினைக்கவும் அஞ்சியதை செயலளவில் காட்டினர். உலகையே கட்டி ஆள்வதாக கனவு காணும் ஆட்சிக் கும்பல் அறிந்ததா அவர் செய்கையினை. அதுதான் இல்லை. போஸ் இங்கிருக்கிறார். அங்கிருக்கிறார். அவ்வளவுதான்......... தகவலில்லை. யுத்த அமளி. ஏகாதிபத்திய வெறியை குலைத்தெறிய உலகெங்கிலும் தோன்றிய சுதந்திர சக்திகளனைத்தும் முற்பட்டன. தம்நாட்டைக்காக்க, நாட்டு மக்களுக்காக. சுதந்திர ஆவேசம் பொங்கியெழுந்தது. போஸின் உணர்ச்சிப் புதையல் கிளம்புவது போலிருந்தது. "காலம் செல்கிறது. பொக்கிஷம் போன்ற காலம். அதை நீங்கள் கைதுசெய்ய முடியாது. திரும்ப அழைக்க முடியாது. தேடுங்கள். இந்தியரின் புவர்களே! தீவிரமாய் தேடுங்கள். மறைந்து கிடக்கும் உங்கள் சக்தியை கண்டு பிடியுங்கள். மகோன்னத—ஆனல் துரதிர்ஷ்டமிகுந்த நம் மாதா உங்களைக் கூப்பிடுகிருள். கீழேவிழுந்து கிடக்கும் உங்களைத் தூக்கிவிடவே அழைக்கிருள்............'அதோ! அதோ! தூரத்திலே. அந்நதிக்கு அப்பால். அக்காடுகளுக்கு அப்பால், அக்குன்றுகளுக்கு அப்பால், நமது ஜன்ம பூமி நம்வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அம்மண்ணில் நாம் பிறந்தோம். இப்போது அங்கேயே திரும்பிச் செல்வோம்!!.........பாருங்கள்! உணர்ச்சியினை ஒவ்வொரு எழுத்துக்களிலும், சப்தத்திலும் உந்திஜொலிக்கின்றன. தன் படைத்தொண்டர்களுக்கு தினம் தினம் இவ்விதமே

பயிற்சி. ஈதல்லவோ சுதந்திர உணர்ச்சி. பொங்கியெழுந்த ஆர்வம் ஒருநிலைப்பட்டுப்பாய்ந்தது. தாய்நாடு நோக்கி வந்துவிட்டது நெருங்கி எட்டுலட்சம் வீரர்கள் தாங்கிய இ. தே. ரா. படை இந்தியாவின் எல்லையை நெருங்கியது.

அதிகாரவர்க்கத்தினரின் ஆட்சி தலைவிரித்தாடியகாலம். ஆயுத பலமும், ராணுவ பலமும் தாக்கியது இ. தே. ரா. படையினரை. நேதாஜியின் உருக்கமிக்க சுதந்தர உணர்ச்சியுண்ட வீரர்கள் பொருதினர். தாய் நாட்டினைக் காக்க, தாயகத்து சோதரர்களை அடிமை வாழ்வினின்றும் விடுவிக்க ஆட்சி வெறியை ஒட்ட துடிதுடித்து தலைமை தாங்கி நடத்தி வந்த நேதாஜி சுபாஷ் வீர சுவர்க்கமெய்தினார் என்ற செய்தி அலறியது படையினருக்கு. சுதந்திர வாயிலை நாடுகிறோம் என்ற உற்சாகமுடன் கொன்றும், குவித்தும் நாசவேலையி லீடுபட்டிருந்த சுதந்தர வீரர்கள் தோள் சோர்ந்தன! வாள் கைகளினின்றும் நழுவின! எதிரியைத் தூக்கும் சமயத்து கைதிப்படுத்தும் கோழைக் கும்பல்களல்லவா! ஆதிக்க வேதாந்தம் படித்தறிந்த ஆட்சிக் கும்பல்! சுதந்தர உணர்ச்சி மீறிய பலர் வீர சுவர்க்கமெய்தினர். எஞ்சியோர் கைதியாயினர். அஹிம்சையில் ஊறியிருந்த காந்திஜீ நோக்கினார். ஆச்சரியமுற்று நேருவை அனுப்பினார். மீட்டார் நேதாஜியின் சுதந்தரப் படையினரை. **புலாபாய் தேசாய்** சென்றார். அதிகார வர்க்கத்தினரின் ஆட்சி வெறியை சின்னபின்னப்படுத்தி குதர்க்கவாதத்தினால் அநீதியைக்குலைத்து சுதந்தரவீரர்களை மீட்டார். "எங்கே

சுபாஷ்'' என்றார் காந்திஜி பதிலில்லை. கண்கள் ஜொலித்தன ஆச்சரியமிகுந்த ஆவேசத்துடன்.

நாட்டின் விடுதலைக்காக விடுதலைப் போராட்டத்தை ஊக்கமுடன் நடத்திய சுத்தவீரர் சுபாஷ்; சுதந்திர தீபத்தை இந்தியத் தாயின் மகுடத்தில் பொருத்தி மகிழ்விக்க வந்த சுபாஷ்; இந்தியாவின் நாற்பதுகோடி மக்களுக்கல்லாது—உலகத்தின் நானூறுகோடி மக்களுக்கு விடுதலை வேட்கை தந்து எங்கோ மறைந்தார்! பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு சாவுமணி அடிக்கப்பிறந்த கருமவீரர் மறைந்துவிட்டாரே என்று எண்ணி கண்ணீர் உகுக்குகிறேன். அன்னவர் போன்ற வீரத் தியாகிகள் பகத்சிங், சுகதேவ், ராஜ குரு ஆகியோர் புன்னகை தவழத் தூக்குமேடையேறி தியாகம் செய்த சுதந்திர வீரர்களுக்கு வணக்கம் செலுத்துகிறேன். இன்னும் எத்தனை எத்தனை வீரர்கள் சொல்லிமுடியாது.....

நம் தமிழ்நாட்டில் சுபாஷ் போன்ற ஒரு வீரர் இருந்தார். யாரெனத் திகைக்க வேண்டாம். "ஏகாதிபத்தியமே! எங்கும் வியாபித்திருக்கும் உனது எதேச்சாதிகார வெறி எம் தமிழ்நாட்டையுமா பீடித்தது. தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியாதேசம் மட்டுமல்ல; இந்த அகில உலகத்திலிருந்தே ஒழித்துவிடுகிறேன் என்று வீரமுழக்கம் செய்தார். "வந்தே மாதரம்'' கோஷத்தினை ஆளும் வர்க்கத்தினரின் கெடுபிடியினிடையே பொழிந்தார். அன்று நாட்டிலிருந்த நிலை, சுதந்திரம் என்று காதில் விழுந்தால் போதும், ஏகாதிபத்தியம் ஆட்டிப் பிழிந்துவிடும் கோஷம் வந்த திக்கினை. விடுதலைப்

போராட்டம் நடத்துவதில் என்ன அமளி! இந்தியாவில் வேரூன்றி நிலைபெற்றிருக்க கையாளும் வியாபாரப் போக்கினைத் தடுத்தார்; விடுத்தார் இரு கப்பல்கள். ஓட்டினார் சுதந்தர உணர்ச்சியுடன். யார்? கப்பலோட்டிய தமிழன், வீரச் சிங்கம்—தீரச் சிதம்பரம். அவருக்குத் துணையானோர் அமரகவி பாரதி, சுப்ரமண்ய சிவா. எத்தனை இன்னல்கள். வறுமையின் வேகம் முட்டுக்கட்டைபோட, அடிமை வரட்சி கவ்வ, தாம்கொண்ட இலட்சியத்தை சகிப்புத் தன்மையுடன் கடைப்பிடித்து வளர்த்தனர். சுதந்தர வாயிலின் முன்னம் இன்றுநாம் முன்னேறுவது எதனால்? இத்தகைய நம் வீரர்களின் தியாகத்தினாலும் அவர்கள், வகுத்த வழியினாலுமே.

**எதேச்சாதிகார சுரண்டல் இனமே!**

வல்லரசு எனப் பெயர்புனைந்து, வியாபார வலையை வீசி ராஜதந்திரப் பூசல்களை புகுத்தி, பொய்ப்பித்தலாட்டம் செய்து, ஒரு தேசத்து மக்களின் சுதந்திர உணர்ச்சியைப் பறித்து அடக்கி அடிமைகொண்டு ஆட்சிசெலுத்துவதிலேயே காலம் கடத்துகிறாய். வாழையடி வாழையாக பெருகிவரும் உனது இனம் இத்தகைய மாபாபச் செயல்களில் தேர்ச்சி பெற்றவை. நயவஞ்சகமெனும் பீடத்தினின்றும் வெளிக்கிளம்பிய உனது இனம் தேர்ச்சிபெற கேட்கவும் வேண்டுமா?

**ஏ! மடமைமிகு மனிதவர்க்கமே!**

உமது அதிகார ஆட்சி, எதேச்சாதிகார ஆட்சி ஆட்டம் காண்கிறது. எமது வள்ளலார் கூறுவதுபோல் "கருணை

யிலா ஆட்சி கடுகிஒழிய"க் காலம் வரையறுக்கப்பட்டுவிட்டது. கோடரிமரத்தின் வேரடியில் வைக்கப்பட்டு இருக்கிறது. ஏன்? காவலுக்கா? இல்லை. அடிமையின் முடிவை அதன் பலனையறிய. ஆட்சி நீடிக்க போதியகாலமில்லை. மேலும் நிலைத்திருக்க அடிகோலமுற்படுவாயாகில், நாட்டாசை வெறிபிடித்த உன் ஆட்சி, மக்களை அடிமைப்படுத்தி ஆளக்கருதும் உன் ஆட்சி உடைந்து சிதறுண்டு சர்வதேசக் குப்பைக்குழியில் கிடத்தப்படும் நிலைகிட்டும்.

## வஞ்சகச் சூழ்ச்சியாளர் கூட்டமே!

சர்வசாதாரணமாய் ஒலித்துவரும் வசைமாரிகளில் இது ஒரு படலம் என்று துச்சமாக எண்ணலாம் உனது பேதை மனம். ராணுவபலமும் ஆயுதபலமும் இருகைபோன்றிருக்க, அணுகுண்டு இயங்குசக்தியிருக்க அச்சமில்லை, அச்சமில்லை என்று மனனம் செய்யவேண்டாம். உம் கோரக் கிருத்தியம் தாங்காது, முளைத்தெழுந்த அத்தனைச்சக்திகளும் மண்ணோடு மண்ணாய்ப் புதைந்துவிட்டதென்று ஆட்சி வெறியில் மூழ்கிய உன் பேதைமனம் எண்ணலாம். அடிமையின் முடிவு என்ன? ஆட்சிவெறியின் முடிவு என்ன? எத்தனை தேசங்கள் வலியிழந்து மனம் நைந்து பரிதாபகரமாகத் தோன்றுகின்றன. எத்தனையை சிறகொடித்தாய். எத்தனையை அங்கங்குலைத்தாய். எத்தனையை அடிமைத்தளையால் பிணித்து இரத்தத்தை உறிஞ்சினாய். எத்தனை ஜீவகோடிகள்! எவ்வளவு பெரிய சக்திகள்! உன் வஞ்சக சூழ்ச்சியால் அழிந்தன. கவிழ்ந்தன. இவையனைத்திற்கும் முடிவு..................சற்றுப்பொறு ஆட்சிவெறியின்

அந்தகாரத்தில் ஆழ்ந்திருக்கும் உன்னையும், உன்னைச்சார்ந்த பலதரப்பட்ட பங்காளிகளையும் புலப்படுத்த, லோகமாதா வின் முன்னம், இதுகாறும் அடிமையின் அரவணைப்பில் அல்லலுற்று வந்த அடிமைப்பட்ட மக்களின் சுதந்தர உணர்ச்சியனைத்தும் ஒருமுகப்படுத்தி, அதனில் நியாயமெ னும் திரிகொண்டுபொருத்தி அணையாது எரியும் சுதந்தர தீபத்தின் ஒளியில் சுதந்திர வேகத்தை நிர்ணயப்படுத்த அடிமையின் தாபத்தை தணிக்க, காலம் வருகிறது. பிரதிக்ஞை எடுத்து சுதந்திர தீபத்தின் ஒளியில், லோக மாதா முன்னிலையில் நியாயப்பங்கீடுசெய்துகொள்ள சித்தப்படுத்திக்கொள். இன்றுவரை இழைத்துவந்த பாபச்செயல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளிவைத்து, சுதந் திர தீபத்தின் பிரகாசத்தில் உனது உருவம் சோபை பட, உனது செய்கை சீர்திருந்த ஆயத்தம் செய்து கொள்.

## உலகத்தே தோன்றிய மாபாவங்களனைத்தும் ஒருருவாய் அமைந்த உன்மத்தக் குழுவே!

இயேசுவின் உயரிய நீதிகளைத் தலைகீழாய் புரட்டி விட்டோம் என்று வேதாந்த மடிக்கிறாயே. பிரபுக்கள் எனும் மாயாஜாலப் புரோக்கர்கள், சர்ச்சில் வகைக் கும் பல் உமது கைவசமிருத்தலால் தர்க்கம் புரியட்டும் என்று வீருப்பு அடிப்பாய். உமது சர்வேஸ்வரன் பௌத்திரன் என்ன சொன்னார் பக்தருக்கும் தாசருக் கும், மற்று மேனையோருக்கும், "தம்பி! ஒரு கன்னத்தில் அடிவிழுந்தால், மற்றொரு கன்னத்தையும் காட்டு" என்று. அதன்படி நடக்க உமது வர்க்கம் கனவிலும்

எண்ணியதுண்டா? உமது ஞானகுரு போதனையை வழுவாது கடைபிடித்தனையா? என்ன பயன்? உனது வஞ்சகப் பார்வையில் கூற்றுபோல் தோன்றும். அறிஞரொருவர் சொன்னார், "ஜெர்மனி அழிந்தால் விஞ்ஞானமழிந்து போகும். இத்தாலியழிந்தால் கலைகள் அழிந்துவிடும்; பிரான்சு அழிந்தால் நாகரீகம் அழிந்துவிடும். ஆனால் பிரிட்டன் அழிந்தாலோ உலகில் முளைத்தெழுந்த பஞ்சமா பாதகங்களத்தனையும் ஒழிந்துவிடும்!" உண்மை. முற்றிலும் உண்மை. இந்த பிரிட்டனே உலகிலுதித்த பஞ்சமா பாதகங்களுக்கு உறைவிடம்; தாயகம் அனைத்தும். அங்கிருந்தே உற்பத்தியாகி உலகெங்கினும் ஏற்றுமதியானது பாதகங்களெல்லாம்.

இதோ! இந்தியாவின் சுதந்தரக்கொடி வானளாவிப பறக்க சித்தமாயிருக்கிறது. இதற்கு முன்னர் இந்தியர்களுக்குத் தனிக்கொடி உண்டா? என்றால்......... வெட்கக் கேடு. யூனியன் ஜாக்கைத்தான் காட்டிவந்திருக்கிறோம். அது நம் அடிமையின் சின்னத்தை பலைறசாற்றி வந்திருக்கிறது. அதை நாம் அறிந்தோமில்லை. ஆனால் இன்று.................நமது தாயின் மணிக்கொடி மூன்று வர்ணங்களோடு மூவுலகிற்கும் பட்டொளிவீசிப் பறக்கிறது. சுதந்திர உணர்ச்சியினை நம் உள்ளத்திலே ஊட்டுவது இம்மூவர்ணக் கொடிதான்.

" தாயின் மணிக்கோடி பாரீர்—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்

ஓங்கிவளர்ந்ததோர் கம்பம்—அதன்
உச்சியின்மேல் 'வந்தேமாதரம்' மென்றே
பாங்கி னெழுதித்திகழும்—செய்ய
பட்டொளி வீசிப் பறந்ததுபாரீர்.

பட்டுத்துகிலெனலாமோ? அதிற்
பாய்ந்துசுழற்றும் பெரும் புயற்காற்று
மட்டு மிகுந்தடித்தாலும்—அதை
மதியாதவ் வுறுதிகோள் மாணிக்கபடலம்.

.... .... .... .... .... .... .... ....

கம்பத்தின்கீழ் நிற்றல்காணீர்—எங்கும்
காணநும்வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற்குரியரவ் வீரர்—தங்கள்
நல்லுயிரீந்துங் கொடியினைக் காப்பார்.

.... .... .... .... .... .... .... ....

சேர்ந்ததைக் காப்பதுகாணீர்—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம்வாழ்க
தேர்ந்தலர்போற்றும் பரத—நிலத்
தேவிதுவஜம் சிறப்புற வாழ்க.

*என்று சங்கநாதம் கொண்டு வீரமுழக்கம் செய்தார் கவிபாரதியார். நம் மூவர்ணக்கொடி அலங்காரக்கொடியல்ல. பின் நம் கொடியின் அடிப்படைத்தத்துவம் தான் என்ன? கொடியிலுள்ள மூன்று நிறங்களை*

ஆரஞ்சு, வெள்ளை, பச்சை ஆகிய மூன்று உயரிய தத்துவங்களை போதிக்கின்றன. மேலே உள்ள ஆரஞ்சுநிறம் தைரியத்தையும், தியாகத்தையும் ஊட்டுகிறது. நடுவில் உள்ள வெண்மை நிறம் சாந்தத்தையும் உண்மையையும் உணர்த்திக் காட்டுகிறது. கீழே உள்ள பச்சை நிறமோ நமக்கு நம்பிக்கையையும் சேவையையுமே புகட்டுகிறது. மலரும் மாலையும் என்ற புத்தகத்திலே தேசீயக் கொடி என்ற தலைப்பில் நம் கவிமணி நமது கொடியினைச் சிறப்பித்துக் காட்டுவதைக் கேட்போம் :—

.... .... .... .... .... .... .... ....

சத்தியங் காக்குங்கொடி—சுதந்திர

சக்தி யுண்டாக்குங் கொடி

சித்தந் தெளிந்திடவே—ஊழியங்கள்

செய்திடத் தூண்டுங் கொடி

.... .... .... .... .... .... .... ....

பட்டினி போக்குங்கொடி—நமக்குநற்

பாக்கியம் சேர்க்குங் கொடி

இட்டமாய் யாவருமே—இணங்கி

இருந்திடச் செய்யுங் கொடி

ஓட்டுக் குடிசையில்

ஓங்கிய மேடையில்

எட்டுத் திசையினில்

எங்கும் எழுந்திடும்

.... .... .... .... .... .... .... ....

1948-ம் ஆண்டு ஜூன் மாதத்திலே நம் நாடு விடுதலை பெற்று சுதந்திரத்தை நல்கப்போகின்றது இனி எந்தச் சட்டங்களும் சாசனங்களும் நம்மை அடிமைப்படுத்தவே முடியாது. அவ்வாண்டு நமக்கு சோதனைமிகுந்ததாக இருக்கும். வகுப்புவாதக் கிளர்ச்சி வேரூன்றியிருக்கும் இக்காலத்திலே மார்க்கவாதிகளுக்கு இது ஒரு சோதனைமிகுந்த காலம். சுதந்தர வேட்கையுடன் தாவிச்செல்லும் மக்களின் விடுதலை உணர்ச்சி சுடர்விட்டுப் பிரகாசிக்க நம்மை நாமே, நம்மிடையே காணப்படும் பிளவுகளைச் சீர்படுத்தி ஒன்றுபட்டியங்க வேண்டும். அப்பொழுதுதான் நமது சுதந்திரம் மங்காத் தீபமாய், என்றென்றும் அணையா ஜோதியாய் ஜீவ ஒளியுடன் மிளிரும். பாரத அன்னையே! இதோ ஆர்வ மிகுதியினால், இச்சிறுவன் சமர்ப்பிக்கும் தீபம் எண்ணெய்க் குறைவாலோ, திரி தேவையாலோ, அதிகார வர்க்கத்தின் பெருமூச்சாலோ அல்லது வேறு எக்காரணத்தாலோ, ஒளி குறைவுள்ளதாக இருக்கலாம். இருப்பினும் அன்னாய்! நின் சேய் மனமுவந்து செலுத்திய அன்புக் காணிக்கையை தாய் உதறித் தள்ளமாட்டாள்

என்று ஒருவாறு துணிவுற்றே உனது வீரக் கழலடிகளில் சமர்ப்பித்து வணக்கம் செலுத்துகிறேன். ஏற்று மகிழ்க.

"எங்கு மனம் அஞ்சுவதில்லையோ, எங்கு ஆண்மையுடன் தலை நிமிர்க்கப்படுகின்றதோ, எங்கு அறிவு சுதந்திரமாயுள்ளதோ, எங்கு உலகமானது குறுகிய கேவலமான பூசல்களாகிய வேலிகளால் பல துண்டுகளாகப் பிளக்கப்படவில்லையோ, எங்கு வார்த்தைகள் சத்தியத்தின் அடிவிதானத்திலிருந்து வெளிவருகின்றனவோ எங்கு களைப்பற்ற முயற்சி பக்குவத்தையும், பரிபூரணத்துவத்தையும் நோக்கி கைகளை நீட்டுகின்றதோ, எங்கு தெளிந்த அறிவின் நீரூற்று உயிரற்ற பழக்க வழக்கமாகிய பாலைமணலிற் பாய்ந்து இற்றுப்போகவில்லையோ எங்கு நீ முனைந்து நின்று மனதிற்கு வழிகாட்டிச் செல்கிறாயோ. அத்தகைய சுதந்தர சுவர்க்கத்திலே என் தந்தையே! என் நாடு விழிப்புறுவதாக. அந்தச் சொர்க்கத்துள்ளே என் நாடு இடம்பெறுவதாக, அந்தச் சுவர்க்கமாகவே எந்நாடு மாறுமாக!".

சுத்தவீரம் சுதந்தர தீபத்தால் ஒளி வீசட்டும்!!!....

எங்கள்

# அரசியல் வெளியீடுகள்!

## கோவிலைத் திறவுங்கள்

"நந்தபாலன்"

தற்கால பிரச்சனை புத்தகம் (3ம் பதிப்பு)

விலை 0—8—0 தபால் செலவு 0—2—0

## சுதந்தரப் போர்

"T. M. வாசுதேவன்"

இதுவரை நடைபெற்ற போராட்டங்களையும் நேதாஜியின் உன்னத சேவையும் விவரிக்கும் அழகான நூல் டில்லி செங்கோட்டை, கேப்டன் லக்ஷ்மி, நேதாஜி, சிங்கப்பூர் சுபாஷ், இன்னும் பல புகைப்படங்களை கொண்டது.

விலை 1—4—0 தபால் செலவு 0—3—0

வியாபாரிகளுக்கு கமிஷன் 25 %

**தியாகக்கொடி பதிப்பகம், துறையூர்.**

## நாசகார சமூகம்.

மெக்ஸிகோ புரட்சி வீரன்

M. N. ராய் எழுதியதின் மொழிபெயர்ப்பு.

வீரம் செறிந்த எழுத்துக்கள், அழகான கருத்து, அற்புத நடை, புத்தக உலகிலேயே புதுமை!

சமூகப் புரட்சிக்கோர் வித்து!

விலை 0—8—0. தபால் செலவு 0—2—0

**அறிவுச்சுடர் பதிப்பகம், துறையூர்**

★

கால்

நூற்றாண்டுகளாக

தென்னிந்தியாவில்

பிரசித்திபெற்ற இடம்?



# ஜெய விலாஸ்





எங்களிடத்தில்

உத்திரவாதத்துடன்





★ கல் ஆபரணங்கள்

★ தங்க நகைகள்

★ வெள்ளி பாத்திரங்கள்

இவைகள் விற்பனைக்கு

தயாரிலிருக்கின்றன.

## M. P. ராமச்சந்திரஞ் செட்டியார்,

ஷராப் வியாபாரம்,

துறையூர், ★ திருச்சி ஜில்லா.

PRINTED AT THE SRI NATARAJA PRESS, TURAIYUR. P. I. C. TY. 46